
ISSN 2278 - 1641
UGC Care Listed Journal

# புதுப்புனல்

கலை இலக்கிய மாத இதழ்

மலர் : 14 இதழ் : 8+ ரூ. 150/– ஆகஸ்ட் சிறப்பிதழ் 2023

## ஆகஸ்ட் சிறப்பிதழ்



31. தொல்காப்பியத்தில் வேற்றுமை கோட்பாடுகள்
ஜெ.கோமளா 86

32. நம்மாழ்வார் பாடல்களில் அக அழகியல்
உ. ஸ்ரீதேவி 90

33. நாட்டுப்புறமும் நாடகக்கலையும் மு.சுவேதா 92

34. பத்துப்பாட்டு அகநூல்களில் மெய்ப்பாடுகள்
ந.லலிதா 94

35. பாரதியாரின் பாஞ்சாலி சபதம் உணர்த்தும்
பெண்ணிய அறம் கி.மாலதி 97

36. வள்ளலாரின் இறைமைக் கோட்பாடு
செ.ரோஜாமணி 99

37. புறநானூற்றில் அரசாட்சியில் அறம்
கு.ஆவுடையம்மாள் 101

38. ஒப்பாரிப் பாடல்களில் சமூக வெளிப்பாடு
R.ஹேமாவதி 103

39. இறையன்பு படைப்புகளில் தனிமனித
மேலாண்மைப் பண்புகள் கோ.துர்காதேவி 105

40. கையறு நிலையும் உணர்வு வெளிப்பாடும்
மா.சரவணக்குமாரி 108

41. உதயசங்கரின் படைப்புகளும் உளவியலும்
கா.விஜயலட்சுமி 111

42. அய்யா என்றொரு மனிதர் தஞ்சையின் விதை நெல்
ச.உமா 113

43. சித்தேரியம்மாள் அம்மானையில் பக்தி நிலையும்,
வழிபடுமுறையும் ஜோ. பால்சுதர்சன் 116

44. குற்றப்பரம்பரை நாவலில் பண்பாட்டுக் கூறுகள்
பா. கிருத்திகா 119

45. சங்க தமிழர் வாணிகம் அ. ஆரோக்கியம் 122

46. சங்க இலக்கியத்தில் பாணர் குடியில் பிறந்த
புலவர்கள்
சி. பரசுராமன் 124

47. எஸ்.ராமகிருஷ்ணன் நாவல்களில் சமுதாயச்
சிந்தனைகள்
அ. அருள்மேரி 127

48. வேள்பாரி நாவலில் பறம்பு மலை அ.டெய்சி 129

49. உளவியல் நோக்கு : ஐங்குறுநூறு (பாலை) மகட்
போக்கிய வழித்தாயிரங்கு பத்து
பி.பாலசுப்பிர...

50. பழந்தமிழரின் நெல் வேளாண்மை
சா. இம்மானுவேல்

51. மருதநில ஊர்களும் கதையாடல் பாங்கும்
கு.மைதிலி

52. செடல் நாவலில் தேவதாசி பெண்ணின் வாழ்வி...
ஏற்படும் சிக்கல்கள்
இரா.அபர்ணா

53. அம்பையின் பெண்ணிய சிந்தனைகள் க. சரவ...

54. நிகழ்த்துக்கலைகள் : பாதுகாப்பும் வழிமுறை...
ரஞ்சிதா. எஸ்

55. பண்டைய இலக்கியங்களில் காணப்பட்ட போர்
மரபுகளில் காட்டப்படும் அறச்சிந்தனைகள்
தி. அமர்ராஜ்

56. திருவண்ணாமலை மாவட்ட அருணாசலேசுவ...
கோயில்கள் அமைப்புமுறை கே.சரவணன்

57. வேள்பாரியின் ஆளுமை ம.சதீஷ்கும...

58. மருத நிலத்தின் நெல் வகைகள்
இ.செண்பகபி...

59. வில்லிபாரதம் காட்டும் குருகுலத்தோற்றம்
க. பிரியங்க...

60. வேளாண் நிலத்தில் வளரும் தாவர உணவு
ஆ. பர...

61. ஔவையார் பாடலில் உவமைகள்
து.மரகதவ...

62. தொன்மம் - அறிமுக விளக்கம் சி. கல்ப...

63. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் தகடூர்...
பங்களிப்பு பா. மேகல...

64. பாரதி கவிதைகளில் காணலாகும் சித்தர்கள்...
தத்துவங்கள் அ. இராஜன் ஜான்

ஆய்வுக்கட்டுரை

# உதயசங்கரின் படைப்புகளும் உளவியலும்

ஆய்வாளர்
**கா. விஜயலட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி
பாரதியார் பல்கலைக்கழகம்

நெறியாளர்
முனைவர் **க.தனலட்சுமி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி

மனித மனத்தின் எண்ணங்கள் செயல்பாடுகள் நடத்தைகள் போன்றவற்றைப் பற்றி ஆய்வு செய்வதே உளவியல் ஆகும். படைப்பாளன் தான் வாழ்கின்ற சமூகத்தில் தன்னைப் பாதித்த நிகழ்வுகளை மனதில் கொண்டு ஒரு படைப்பைப் படைக்கின்றான். அப்படைப்பில் இடம்பெறும் பாத்திரங்கள் வாயிலாகப் படைப்பாளரின் மனம் வெளிப்படுகிறது. அப்படைப்பைப் படிக்கும் பொழுது பாத்திரங்களின் மனம் வாசகர்களுக்கு வெளிப்படுகிறது. இவ்வாறு நடைபெறக் கூடிய படிநிலைகளை உதயசங்கரின் சிறுகதைகளின் வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**உளவியல்**

உளவியல் என்பது உயிரினங்களின் நடத்தையைப் பற்றி அறியும் மைய முயற்சியாகும். குறிப்பாக நம்மை நாமே அறியும் தனிப்பட்ட தேடுதலாகும். நமது உணர்வு எண்ணங்கள் நாம் செய்யும் செயல்கள் போன்றவற்றோடு தொடர்புடையது உளவியல். இதனை உள்ளத்தை பற்றிய அறிவியல் அல்லது உளவியல் என்கிறார். "சிக்மண்ட ஃபிராய்ட்".

இலக்கியமும் உளவியலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. இலக்கியத்திறனாய்வாளரும் ஒப்பிலக்கிய அறிஞருமான ரெனேவெல்லக் இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் உள்ள தொடர்பை நான்கு நிலைகளில் எடுத்துரைக்கின்றார்.அவை

1. படைப்பாளர் உளவியல்
2. படைப்பாக்க உளவியல்
3. படைப்பில் உள்ள பாத்திரங்களில் உளவியல்
4. வாசகர் உளவியல் என்பனவாகும்.

**பாத்திர உளவியல்**

உதயசங்கர் தனது சிறுகதைத்தொகுப்பில் இடம்பெறும் பாத்திரங்களின் உளவியலைக் கதை கூறும் போக்கில் மிக அழகாக ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

மனித மனம்உளச்சோர்வுக்கு ஆட்படும் போது மனச்சிதைவு ஏற்படுகின்றது. மனச்சிதைவின் காரணமாகத் தன்னுடைய அன்றாட பணியில் கவனம் செலுத்த இயலாமல் போகின்றது. அதனால் அச்சம் ஏற்படுகின்றது. அதன் மூலம் கனவு தோன்றுகின்றது. அதன் மூலம் துன்பநிலையை மனம் அடைகின்றது. இதனால் மனதில் எதிர்மறையான எண்ணங்கள் தோன்றி தற்கொலை போன்ற செயலில் ஈடுபடுகின்றது.

படைப்பாளர் தான் சொல்லவரும் கருத்தை வாசகர்களுக்குத் தெளிவாக வெளிப்படுத்த கதையில் பல்வேறு பாத்திரங்களைப் படைக்கின்றார். படைப்பாளர் படைக்கக் கூடிய பாத்திரங்களைக் கதையின் வளர்ச்சிக்கும் சிக்கலுக்கும் பயன்படுத்தி பின்பு கதைச்சிக்கலை அவிழ்ப்பதற்கும் பயன்படுத்துகின்றார்.

**மனச்சிதைவு**

தன்னைப் பாதிக்கக் கூடிய நிகழ்வுகள் அடுத்தடுத்து நிகழும் போதும் மனம் மிகவும் துன்பத்தில் ஆழ்ந்து மனச்சிதைவை அடைகின்றான். அதனால் அவன் தன்னுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளில் ஈடுபட முடியாமல் துன்புறுகின்றான். நடத்தையில் மாற்றம் எதிர்மறைஎண்ணங்கள் போன்றவை காணப்படுகின்றன.

நம்பி இருந்தவர்களால் வஞ்சிக்கப்படுதல் எதிர்பாராத அதிர்ச்சித்தகவல்களால் பாதிக்கப்படுதல்கோபத்தையும் தாபத்தையும் தணித்துக்கொள்ளும் வழி அறியாது இருத்தல் காரணம் அற்ற அச்சம் இந்த உலகையே தன் உள்ளங்கைக்குள் அடக்கிவிடும் அபார ஆற்றல் தனக்கே உண்டு என்ற உயர்வு மனப்பான்மை உள்ளிட்ட பல்வேறு உணர்ச்சிக் கொந்தளிப்பின் பிம்பங்களாக நாள்தோறும் நூற்றுக்கானோர் மனச்சிதைவு அடைகின்றனர். நம்முள் ஏற்படும் அதிகப்படியான மனச்சோர்வு வேதனை மனஅழுத்தமஇழப்புஇயலாமை போன்ற உணர்வுகள் நமது மூளையின் பழக்கவழக்கங்களை மறப்பதற்கும் காரணமாக அமைந்து விடுகின்றன.

உதயசங்கர் அவர்களின் உடைந்த கண்ணாடி எனும் குறுங்கதையில் இடம்பெறும் பாத்திரம் நரேன். அவனது வீட்டில் தினந்தோறும் முகம்பார்க்கும் கண்ணாடி உடைந்துவிடுகின்றது. காரணம் புரியவில்லை. மனைவியிடம் கேட்டதற்கு எனக்கெப்படி தெரியும் என்று குனிந்து கொண்டே பதில் சொன்னாள். ஒருநாள் இரவு நரேன் துர்சொப்பனம் கண்டு விழித்தான்.அன்று தான் தன் மனைவி மனச்சிதைவு அடைந்திருக்கிறாள் என்பதையும் கண்ணாடி உடைவதற்குப்பின் காரணியாக அவள் தானிருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டான். நரேனுக்குத் துர்ச்சொப்பனம் வந்தது.விழித்துப் பார்த்தான். அருகில் மனைவி இல்லை. எழுந்து அடுக்களைக்குப் போய் தண்ணீர் குடித்தான். அப்பேது பாத்ரூமிலிருந்து கண்ணாடி உடையும் சத்தம் கேட்டது. மெல்ல குளியலறை பக்கமாகப் போனான். சாத்தியிருந்த கதவின் இடுக்கின் வழியே பார்த்தபோது உடைந்த கண்ணாடித்துண்டுகள் ஒவ்வொன்றாய் எடுத்து தன்னுடைய கண்களுக்க நேராக மூக்குக்கு நேராக உதடுகளுக்கு எதிராக கழுத்துக்கு நேராகமார்புக்கு நேராக வயிற்றுக்கு நேராக மாறி மாறி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவனது மனைவி.

நரேனுக்கு அதிர்ச்சியில் மூச்சு உடைந்தது.

அவன் ஒரு நாள் முயங்கும் போது மனைவியிடம் ருத்வி! தனித்தனியா பார்க்கும்போது உன் கண்ணுமூக்கு வாய் முலை மற்றது எல்லாம் அழகா இருக்கு.ஆனா மொத்தமா பார்த்தா ஏதோ ஒண்ணு மிஸ்ஸிங் என்று சொல்லிக்கொண்டே இயங்கியது மங்கலாக நினைவுக்கு வந்தது(அ.மி.நி. ப. 45) என்று அன்பாக நடக்க வேண்டிய கணவனே தன்னை வஞ்சிக்கும்படி பேசியது ருத்விக்கு மனச்சிதைவு ஏற்படக் காரணமாக அமைந்தது என்று மனச்சிதைவு அடைந்த பெண்ணின் மனநிலையை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**அச்சம்**

மனவெழுச்சிகள் மனிதனது வாழ்க்கையில் முக்கியப்பங்கு வகிக்கிறது. நமது செயல்களில்ஒரு சிறிய பங்கு தான் நமது சிந்தனையின் அடிப்படையில் எழுகிறது. பெரும்பங்கு நமது மனவெழுச்சிகளால் உந்தப்படுகிறது.

மனவெழுச்சி என்பது தூண்டிவிடப்பட்ட மனநிலை அல்லது மனவெழுச்சி என்பது செயல்பட முனைதல் என்றும் மன உணர்ச்சி சூழ்நிலை என்றும் செயல்பட முனைதல் என்றும் மன உணர்ச்சி ஒட்டு மொத்தமாகமேலோங்கி நிற்கும் நிலை என்றும் மனஎழுச்சியை உளவியலார் பலவாறு விளக்குகின்றனர்.

மனவெழுச்சிக் காரணிகள் 1. சினம் 2. அச்சம் 3. மகிழ்ச்சி.அச்சம் என்பது மனிதர்களுக்குத் துன்பம் ஏற்படும் சூழ்நிலைகளில் எழும் மனவெழுச்சியாகும்.

அச்சம் ஓர் எதிர்மறை மனவெழுச்சியாகும். விலங்குகளிலும் இது காணப்படுகின்றது. மனவெழுச்சி என்ற சொல்லுக்கு நேர் ஆங்கிலச் சொல்லான எமோசன் என்பது எமோவிரி என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். அதன் பொருள் வெளிக்கொணர்தல் என்பதாகும்.'

தனி மனிதன் தன்னால் வெற்றி கொள்ள ஆபத்தான ஒரு நிலை ஏற்படும் பொழுது அச்சம் ஏற்படுகிறது. அச்சம் கொண்ட நபர்கள் திரும்ப திரும்ப ஒரே செயலை எண்ணிக்கொண்டும் ஒரு நாளின் பெரும்பகுதியை இந்த எண்ணங்களோடு போராடுவதில் செலவிடுவார்கள். அவர்களுடைய எண்ணம் மற்றும் செயலில் மாற்றம் காணப்படும்.'

உதயசங்கர் அவர்களின் அழைப்புமணி எனும் குறுங்கதையில் தனிமையில் இருக்கும் போது ஏற்படும் அச்சம் சுட்டப்பட்டுள்ளது. அழைப்புமணி கேட்கிறது வாசலில் யாருமில்லை. அமைதியான தெருஆள்நடமாட்டமில்லை வெளியே என்ன நடந்தாலும் உள்ளே ஓசைகேட்கும் நிசப்தநிலை எனவே கதவு திறக்க அச்சம். பார்த்தால் வெளியே யாருமில்லை என்று தனிமை அச்சம் விளக்கப்பட்டுள்ளது. "மறுபடியும் அழைப்புமணி அடித்தது. அழைப்புமணியின் சுவிட்சை அணைத்து வைத்தேன். என்னுடைய அலைபேசியை எடுத்தேன்.யாரையாவது அழைக்கலாமா என்று யோசித்தேன். யார் வந்தாலும் அவருடன் மரணமும் வந்துவிடுமோவென்று பயம் வந்தது" (அ.மி.நி.ப.7) என்று உதயசங்கர் உளவியல் சார்ந்து படைத்துள்ளார்.

**கனவு**

தன்னுடைய ஆழ்மன உணர்வுகளும் எண்ணங்களும் ஒரு மனிதனுக்கு கனவாகத் தோன்றும் என்று கூறுவர். "மனதின் ஆசை, அச்சம் தன் ஒறுப்பு மனோபாவம் இவைதான் கனவுகளுக்குக் காரணமாகின்றன என்பது இதில் இருந்து புரிகிறது."' நமது வாழ்க்கையில் அண்மையில் ஏற்பட்டஅனுபவங்களும் மறைந்த அல்லது ஒடுக்கப்பட்ட ஆசைகளும் கனவுகளாய்த் தோன்றுகின்றன. தீர்க்கப்படாத முடிவுக்கு வராத சிந்தனைகள் அன்றிரவு கனவுகளாய்த் தோன்றும் என்பர்.

உதயசங்கரின் "அசைவற்று மிதக்கும் நிழல்" குறுங்கதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள இறந்தவர்களின் கனவு எனும் கதையில் வரும் பாத்திரம் கார்த்தி அச்சம் எனும் உளவியல் தன்மையில் படைக்கப்பட்டுள்ளது எனலாம்.

"கார்த்தி வேர்த்து விறுவிறுத்துப்போய் எழுந்தான்.மறுபடியும் அதே மாதிரியான கனவு. இந்த முறை சந்துரு வந்திருந்தான். அதுவரை பார்த்திராத தெருவுக்குள் அப்போது தான் ஊரிலிருந்து தோள் பையுடன் வந்து கொண்டிருந்த சந்துருவைக் கார்த்தி பார்த்தான்.

சந்துரு கார்த்தி கையைப்பிடித்தழைத்தான்

டேய் விட்றா டேய் விட்றா என்று கத்தினான். கார்த்தி முழிப்பு வந்துவிட்டது. ச்சே கனவு சந்துரு இறந்து பத்து வருசமாகிவிட்டது." (அ.மி.நி.ப.40) என்று இறந்து போனவர்களில் அவன் நண்பன் உறவுகள் முன்னாள் காதலி என்று அனைவரும் கனவில் வந்து கார்த்தியை அச்சத்தில் ஆழத்தினர் என்று ஆசிரியர் படைத்துக்காட்டியுள்ளார்.

**துன்ப உணர்வு**

மனித மனம் எதிர்பார்க்கும் ஒன்று கிடைக்காத பொழுது அதனைப் பற்றியே சிந்திக்கிறது. இச்சிந்தனை மேலெழும் போது அது துன்ப உணர்வாக மாறுகிறது. ஒரு குறிப்பிட்ட எண்ணத்திற்கு அதன் கிளர்ச்சி அளவுக்கு அதிகமான ஆற்றல் ஊட்டினால் அது இறுக்கத்தை ஏற்படுத்தி உள்ளத்தைத் துன்ப நிலைக்கு ஆளாக்கிவிடும் என்கின்றார்கள்.

ஒருவரது தோற்றத்தின் அடிப்படையில் குறை பேசுவது மனவருத்தமடையச்செய்யும் செயலாக அமைகின்றது. அதனால் துன்ப உணர்வு ஏற்படுகிறது.

உதயசங்கரின் 'வேர்' எனும் குறுங்கதையில் செல்வியின் பின்புறம் வேர் போன்ற முளை இருப்பதைப் பார்த்தான் கணவன்.இதைப்பற்றி ஏன் என்னிடம் சொல்லவில்லை எனக் கோபப்பட்டான். பிடுங்கி எறிந்தும் விட்டான். இது செல்விக்கு துன்ப உணர்வினை ஏற்படுத்தியது. "காலையில் திலக் எழுந்தபோது குளித்து முடித்து காபியுடன் வந்த செல்வியைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டான். அப்படி முத்தமிடும் போது திலக் அவளுடைய பின்புறம் ஏதாவது தட்டுப்படுகிறதா என்று தடவிப்பார்த்தான். இன்றைக்குக் காலையிலேயே தனது பின்புறத்தில் முளைத்த வேரை திலக்குக்குத் தெரியாமல் மறைத்துக்கொள்ளத் துணிந்திருந்தாள் செல்வி" (அ.மி.நி.ப. 48)

**தற்கொலை**

ஒருவரின் விருப்பம் நிறைவேறாத பொழுதோ அல்லது தடைபடும் பொழுதோ தம் உயிரைத் தாமே போக்கிக்கொள்ளும் நிலையே தற்கொலை என்பர். ஆசைகள் நிறைவேறாத மனிதன் எளிதாகத் தன்னை அழித்துக் கொள்ளும் தன்மையில் விழுந்து விடுகிறான். "உருத் செ.கேசன் வேண்டும் என்று ஒருவனுடைய வாழ்வை எடுப்பது அல்லது சாவு தன்னை நெருங்கும் போது அதிலிருந்து காப்பாற்றிக் கொள்ளத் தவறுவது தற்கொலை ஆகும்".

உதயசங்கரின் "பின்பும் பெய்தது மழை" எனும் தொகுதியில் ஆணைக்கிணறு தெரு எனும் சிறுகதையில் வரும் அப்பாச்சி தனது மகன் தன்னை உதாசீனம் செய்து பேசியதற்காக மனவருத்தமடைந்து தற்கொலை செய்துகொள்கிறாள்.

"அப்பாச்சியைப் பார்த்து அப்பா நீயெல்லாம் இருந்து ஏன் கழுத்தறுக்கே..... இந்த வயசில மூக்குப்பொடி ஒரு கேடா? மனுசந் தன்னால சாதிக்கப்போற மாதிரி என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். அன்று முழுவதும் மோட்டைப்பார்த்தபடியே உட்கார்ந்திருந்தாள் அப்பாச்சி..... தரையில் எதையோ தேடுவதைப்போல விரல்களால் பரசிக் கொண்டேயிருந்தாள் ..பொடிமட்டையை வாங்கி அருகில் வைத்துக்கொண்டாள். பிரிக்கவில்லை.அம்மா தான் அப்பாச்சி இறந்த விட்டில் மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்" (பி.பெ.ம.ப.10) என்று பாட்டியின் தற்கொலைக்கு மனத்துயரம் தான் காரணம் கூறப்படுகிறது.

**எதிர்மறயைன எண்ணங்கள்**

ஒருவரது மனம் உளச்சோர்வுக்கு ஆட்படும் போது எதிர்மறையான எண்ணங்கள் மனதில் தோன்றுகின்றன. பெக்கு என்பவர் ஒருவரின் எண்ணங்களின் தன்மையே உளச்சோர்வுக் கோளாறுகளுக்கு அடிப்படைக்காரணம் என்பர். அவை ஒருவரது நடத்தையையே மாற்றுகின்றன. உலக வாழ்வு பற்றிய தவறான கண்ணோட்டமும் எதிர்காலத்தைப் பற்றிய தவறான கண்ணோட்டமும் உளச்சோர்வு கோளாறுகளின் காரணங்கள் என்று சுட்டுவது மதிப்பிடற்குரியது.

உதயசங்கரின் அசைவற்று மிதக்கும் நிழல் குறுங்கதைத் தொகுதியிலுள்ள சட்டை போடாதவர் கதையில் வரும் பாத்திரம் இதற்கு நல்ல சான்று எனலாம். "கல்லூரி காலத்தில் பெல்பாட்டம் பேண்ட் பூக்கள் போட்ட சட்டை என்று அமர்க்களமாகத் திரிந்தவர் தான். படித்து முடித்து ஐந்து வருடங்களில் அவர் எழுதாத பரீட்சை இல்லை. அவருடன் படித்த அத்தனைபேரும் எப்படியோ வேலைதொழில வியாபாரம் என்று போய்விட்டார்கள். ஆனால் கோவிந்தன் மாமாவுக்கு எதுவும் லபிக்கவில்லை. அவர் காதலித்த மாதுரிக்கு கலியாணம் முடிந்த மறு நாளிலிருந்து அவர் சட்டையைத் துறந்தார்." (அ.மி.நி.ப. 50)

**தொகுப்புரை**

இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் உள்ள தொடர்பு நான்கு நிலையில் காணப்படுகின்றது. உளவியலின் கூறுகளான மனச்சிதைவு அச்சம்கனவு துன்ப உணர்வு தற்கொலை எதிர்மறை எண்ணங்கள் போன்றவை உதயசங்கர் படைப்புகளில் இடம்பெறும் பாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுகின்றது என்பதை இவ்வாய்வு சுட்டுவதாக அமைந்துள்ளது.

**அடிக்குறிப்பு**


1. விஸ்வநாதன்.ந உளவியலும் வாழ்வியலும் ப.எ.18.
2. தி.இரா. அரங்கநாதன் இளையோர் உளவியல் ப.160.
3. செ.சாரதாம்பாள் இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் ப. 157.
4. சுந்திரமோகன் சிந்தனையாளர் ஃபிராய்டுப.77
5. புழ.குணசேகன் மெல்லக்கொல்லும் குற்ற உணர்விலிருந்து விடுபட